புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

==========================================================================

# விடுதலை வேள்வியில் கொங்கு மகளிர்

*முனைவர் ஆர். நிர்மலா தேவி*
*உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் தமிழ்த்துறை*
*வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)*
*ஈரோடு - 638 012*

==========================================================================

*ஆய்வுச் சுருக்கம்*

*நம் இந்தியா ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டு கிடந்த போது வீறு கொண்டு விடுதலை வேள்வியில் களம் இறங்கி தன் உடல் பொருள் ஆவி நீத்த சான்றோராகள் எண்ணிலடங்கா. அதிலும் தமிழகத்தில் ஆண், பெண் இருபாலாரும் தன்னலம் கருதா தொண்“டாற்றினார்கள். அதில் வரலாற்றில் இடம் பெற்றோர் சிலரே. கொங்கு நாட்டில் சுதந்திர வேட்கை கொண்டு ஆண்களுக்கு நிகராக தொண்டாற்றிய மகளிர் சரித்திரத்தில் பொன் எழுத்தில் பதிக்கத்தக்கவர்களே! ஆங்லேயர்களையும் கதிகலங்க செய்த வீர மங்கையர்கள். அதில் கொடுமுடியைச் சார்ந்த கானக்குயில் கே.பி. சுந்தரம்மாள் மற்றும் திருப்புர் வீரபாண்டியைச்s சார்ந்த எஸ்.என் சுந்தரம்மாள் இருவரும் சுதந்திர வேட்கையில் குதித்த கொங்குத்தங்கங்கள்*

*“விடுதலைக்கு மகளிரெல் லோரும்*
*வேட்கை கொண்டனம், வெல்லுவம் என்றே“*

*என்றார் முண்டாசுக்கவிஞர். வாணிபம் செய்யும் நோக்குடன் நம் மண்ணில் 1600 – ஆம் ஆண்டில் கால்பதித்த ஆங்கிலேயர்கள் 1750ஆம் ஆண்டு முதல் முழுமையான ஆட்சியாளராக உயர்ந்து 200 ஆண்டு காலம் நம் நாட்டை அடக்குமுறையில் ஆட்சி செய்தனர். வெள்ளையர்களுக்கு முதல் எதிர்ப்பு குரல் கொடுத்தவர்கள் தமிழகர்கள்.*

*உலகளவில் பல நாடுகள் சுதந்திரப் போரை எதிர் கொண்டிருக்கின்றனர். ஆனால் எந்த நாட்டிற்கும் இல்லாத பெருமை நம் நாட்டிற்கு உண்டு. என்னவென்றால் சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் களமிறங்கி சிறை சென்றதும் தங்களுடைய இன்னுயிரை ஈந்ததும் உலகு அறிந்த ஒன்று. ஆண் போல் வேடம் தரித்து ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தோர்களின் முன்னோடியாக நிற்பவர் மணிகர்ணிகா என்ற பெயரினைக் கொண்ட ஜான்சி ஆண்ட கங்காதர் ராவின் மனைவி ஜான்சி ராணி. தோல்வி அடைந்த போதிலும் சரணடைய மறுத்து வீரமரணம் அடைந்த வீரமங்கை. அவுத் சமஷ்தானத்தின் ராணி ஹஷ்ரத் மஹால் லக்னோவைக் காப்பாற்ற நடந்த போரில் நேரடியாகப் போர்களத்திற்குச் சென்று ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடி வீரர்களை ஊக்குவித்து சாதனை புரிந்தவர் கர்நாடகாவின் கடறகரையோரப் பகுதியில் ஒரு சிறு பிராந்தியத்தை அரசாண்டு இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திய அப்பக்கா தேவி. 18 - ஆம் நூற்றாண்டில் கேரளாவிலுள்ள கண்ணனூர் வழியாக வெள்ளையர்கள் செல்லக் கூடாதென்று தடைவிதித்து சிறை சென்று மாய்ந்த ராணி பீபி. மகாத்மாவின் நகமும் சதையுமாக வாழ்ந்த கஸ்தூரிபா, நேருவின் அன்னை ஸ்வரூப ராணி, மனைவி கமலா நேரு, தமக்கை விஜியலட்சுமி பண்டிட், சரோஜினி நாயுடு மற்றும் தமது 21 ஆம் அகவையில் இந்தியத் தேசியு காங்கிரசில் சேர்ந்து 1920 இல் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்து பாடுபட்ட அவரது மகள் பத்மசா நாயுடும், பல முறை சிறைவாசம் சென்ற அருணா ஆஜப் அலியும், அகில இந்திய காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த பத்ருதீன் தயாப்ஜி மனைவி பீபி ரஹத் அந்நாஃப்ஸ், முத்த மகள் அமீனாதாயப்ஜி, இளைய மகள் சுசீலாலுக்மானி, மூவர்ண கொடியினை முதன் முதலில் உலகுக்கு*

அறிமுகப்படுத்திய காமா அம்மையார் என்று வரலாற்றில் தடம் பதிந்த பெண்கள் எண்ணற்றோர்.

தமிழக பெண்கள் நாட்டுப்பற்றிலும் வீரத்திலும் சிறந்து விளங்கியவர்கள் பட்டியலில் முதலில் வலம் வருபவர் வீரமங்கை வேலுநாச்சியார். கடலூர் அஞ்சலை அம்மையார், , பத்மாஸினி அம்மையார், அம்மாக்கண்ணு, மதுரை சொர்ணத்தம்மாள், சிறை சென்று தன் குழந்தைகளை இழந்த சரஸ்வதி டாக்டர் பி.சுப்பராயனின் மனைவி ராதாபாய், மகள் பார்வதி கிருஷ்ணயும், கோவிந்தம்மாள் அய்யாமுத்து, காப்டன் இலட்சுமி, ருக்குமணி, லட்சுமிபதி வரிசையில் கொங்கு நாட்டில் விடுதலைக்காக பாடுபட்ட வீர மங்கைகள் பலர்.

சோழ நாடு சோறுடைத்து பாண்டிய நாடு முத்துடைத்து சேர நாடு வேழம் உடைத்து கொங்கு நாடு சான்றோர் உடைத்து என்பது ஆன்றோர் வாய்மொழி. அம்மொழிக்கேற்ப கொஙகு நாட்டில் இல்லறத்தை மாண்புடன் நடத்தி வீரத்திலும் விவேகத்தில் சிறந்து வலம் வந்தவர்கள் கொங்கு மகளிர்கள். தங்களுக்கு என்ற தனி மொழிநடை உடையவர்கள். பெரியார் பிறந்த மண்ணில் வீறுகொண்டு எழுந்த பெண்கள் பலர். பெரியாரின் ஆத்மார்த்தமான தோழமை கொண்ட மனைவி மங்கையர் திலகம் நாகயம்மையார் அவருடன் இணைந்து போராடிய கண்ணம்மா, பெரியாரிடம் விளைந்த முத்துக்குள் நன்முத்து மணியம்மை, சரஸ்வதி பாண்டுரங்கம், பியாரிபீபி, கே.பி.சுந்தரம்மாள் , எஸ்.என்.சுந்தரம்மாள் மற்றும் வெளிச்சத்திற்கு வாரா மங்கையர் திலகங்கள். அதில் சுந்தரம்மாக்களின் பணி மகத்துலமானது.

திருமதி கே.பி. சுந்தராம்பாள்

திருமதி கே.பி. சுந்தராம்பாள் அவர்கள் கொடுமுடியில் பிறந்த நாடக காரிகை. பிறக்கும்போதே தந்தையை இழந்து தாய் பாலாம்பாளின் பராமரிப்பில் வளர்ந்த மங்கை. ஐந்து வயதிலேயே பாடும் திறன் பெற்றரவர். வயிற்றுப் பிழைப்பிற்காக கரூருக்கு குடிபெயர்ந்தது இவரின் குடும்பம். இவரின் பாடலைக் கேட்ட போலீஸ் டெப்டி சூப்ரின்டென்டென்ட் ஆர்.எஸ்.கிருஷ்ணசாமி அவர்கள் கே.பி. சுந்தராம்பாளுக்கு ரூபாய் 50 சன்மானம் அளித்து அவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்பத்தினை ஏற்படுத்தினார். அவரை வேலுநாயர் ராஜாமணி அம்மாள் நாடகக் கம்பெனி உரிமையாளர் வேலு நாயரிடம் அறிமுகம் செய்து வைத்தார். சங்கரதாஸ் சுவாமி சீடராகிய வேலு நாயர் நல்லதங்காள் நாடகத்தில் நல்லதங்காளின் ஒரு குழந்தையான ஞானசேகரன் பாத்திரத்தில் அவரை குழந்தை நட்சத்திரமாக அறிமுகப்படுத்தினார்.. பல நாடகக் குழுவில் இணைந்து ஆண் வேடமிட்டு நடித்தார். நாடக கலைஞரான பிராமண நல்ல இசைக் குடும்பத்தில் பிறந்த எல்.ஜி. கிட்டப்பாவுடன் காதல் மலர்ந்து பல இடையுறுக்குப் பின்னர் திருமணம் நடந்தது. பல ஊர்களுக்குச் சென்று நாடகங்களை நடத்தினார்கள். மகாத்மாவின் அறைகூவலைக் கேட்டு சுதந்திர பிரச்சார நாடகங்களை நடிக்கத் தொடங்கினார்கள் நாடகக்குழுவினர். அக்காலகட்டத்தில் வாழ்ந்த கவிஞர் ராமதாஸ் தன் பாடல்கள் மூலம் சுதந்திரத் தீயை மூட்டினார். கே.பி. சுந்தராம்பாள் அவர்கள் ‘‘காந்தியோ பரம ஏழை‘‘, நம்பிக்கை கொண்டெல்லோரும் ராட்டை சுற்றுவோம்‘‘ போன்ற பாடல்களைப் பாடி இசை தட்டுக்களை வெளியிட்டார். அப்பாடல்கள் அவருக்குப் பேரும் புகழையும் பெற்றுத் தந்தது. பல வெளி நாட்டுக்கு செல்லும் வாய்ப்பினைப் பெற்றார். எத்தனை தடைகளுக்கு இடையிலும் கே.பி.எஸ் அவர்கள் எந்த நாடகம் ஆனாலும் அதில் முதலில் பாடும் பாடல்

‘‘சிறை வாயில் கண்ணீ வடித்தாள்
பாரத மாதா (சிறை)
கறையொன்று மில்லாக் காளையர் மூவரைக்
கழுத்தை அறுத்ததனாலே கவலை கொண்டே (சிறை)
தொகையறா
‘‘மறந்திட முடியாத நம்மாதாவின் சேவையில்
தனம் வைத்து முயன்றதாலே
பெறற்கர்ய பகவத்சிங் ராஜகுரு சுகதேவைப்
பிரிந்தே வருந்துகிறாள் நம் அன்னை பாரத மாதா‘‘

பட்டி தொட்டிகளில் எல்லாம் இப்பாடல் ஒலித்தது மக்கள் மனதில் சுதந்திர தாகத்தினை ஏற்படுத்தியது.. காலத்தின் கோலத்தால் திருமணமான ஏழாவது ஆண்டில் உடல்நலக்குறைவால் கணவர் கிட்டப்பா காலமானார் 25-ஆவது வயதில் விதவையான சுந்தராம்பாள் தன் நாடகத் தொழிலிருந்து விலகி துறவியானார். காங்கிரஸ் கட்சிக்காக " காந்தியோ பரம ஏழை. ராட்டையின் சிறப்பு, கதர் துணியின் மகிமை, அன்னிய துணிகளை பகிஷ்கர்க்க வேண்டிய தேவை, வட்ட மேஜை மாநாட்டில் காந்தியின் பங்கேற்பு, பகத்சிங்க் ராஜகுரு சுகதேவ் இறப்புகான அஞ்சலி பாடல், பாரதியார் பாடல்கள் ஆகிய பல பாடல்களை பாடி சுதந்திர தாகத்தினை ஊட்டிய அம்மையாரின் சோகத்தினை அறிந்த காந்திஜி நேரில் வந்து ஆறுதல் கூறி அவரைச் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபடுத்தி கொள்ளுமாறு அறிவுறுத்த அவரின் வேண்டுகோளுக்கு இணங்கி காங்கிரஸ் கட்சிப் பணியில் செயல்படத் தொடங்கினார். காங்கிரஸ் கடசியின் ஐம்பதாவது ஆண்டு நிகழ்வில் வந்தே மாதரம் என்ற பாடலை உணர்வோடு பாடி இசைத்தட்டினை வெளியிட்டார். மக்கள் மத்தியில் வந்தே மாதரம் என்ற தாரக மந்திரம் ஒங்கி ஒலிக்கத் தொடங்கியது. அவர் மறைந்தாலும் அவர் பாடல்கள் இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இவ்வாறு தன் இன்னிசைக் குரலால் நாட்டின் விடுதலைக்காக பாடி மக்கள் விடுதலை உணர்வினைத் தூண்டியவர் தான் திருமதி கே.பி.சுந்தராம்பாள்..

திருமதி எஸ்.என்.சுந்தராம்பாள்

கொங்கு தங்கம் திருப்பூர் வீரபாண்டி பிரிவுக்கு மேற்கே உள்ள குப்பாண்டபாளைத்தில் 07.10.1913 - ல் பிறந்த மாணிக்கம். நாச்சிமுத்து கவுண்டர் மற்றும் சாமியாத்தாளுக்கு பிறந்த இரண்டாம் மகள். அவினாசிக் கவுண்டன்பாளையத்தைச் சார்ந்த அருணாசலத்தைக் கைப்பிடித்த காரிகை. இரு மகன்களைப் பெற்றெடுத்த நங்கை. சிறு வயது முதலே ஆன்மீகத்திலும் நாட்டுப்பற்றிலும் தீரா அன்பு கொண்டவர். காந்தியின் சீடர். பல காங்கிரஸ் தலைவர்களால் நேசிக்கப்பட்ட பெண்.

கதராடையில் ஈடுபாடு

காந்தியடிகள் ஹரிசன சேவாவிற்கு நிதி திரட்ட சுறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது திருப்பூர் நொய்யல் ஆற்றங்கரையில் அவரது பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் காந்தியின் உரையைக் கேட்கக்கூடிய வாய்ப்பு திருமதி எஸ்.என்.சுந்தராம்பாளுக்குக் கிடைத்தது. அவரின் உரையால் ஈர்க்கப்பட்ட சுந்தராம்பாள் அவர்கள் தன்னுடைய நகைகளைக் காந்தியின் ஹரிசன சேவாவிற்கு நிதிக்கு கழட்டிக் கொடுத்தார். சிறுமியின் செயலுக்கு அவரைப்பாராட்டி அவளிடம் சுதேசி கொள்கை வளரவும், கைத்தொழில் செழிக்கவும், நெசவாளர் வறுமையிலிருந்து மீளவும் கதராடை அணியும்படி வேண்டிக் கொண்டார். அவரின் வேண்டுகோளிற்கேற்ப தன்னுடைய இறுதிக்காலம் வரை கதராடை அணிந்ததோடு மற்ற பெண்களையும் கதராடையை அணியும்படி வேண்டிக் கொண்டார்.

சிறை செல்லுதல்

காந்தியடிகளின் கொள்கையில் ஈடுபாடு கொண்ட சுந்தராம்பாள் கள்ளுக்கடை மறியல், தீண்டாமை ஒழிப்பு போன்ற அவரின் அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றார். ஒத்துழையாமை இயக்கத்தில் 1932 –ஆம் ஆண்டு திருப்பூரில் கலந்து கொண்டபோது போலீரால் தாக்கப்பட்டார். நிறை மாத கர்ப்பிணியாக இருந்தபோது காந்தி அறிவித்த தனிநபர் சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டார். குழந்தைப்பேறுக்குப்பின் சென்னை வரை நடைபயணம் செல்லும் கொடிப் போராட்டத்தில் மூன்று மாதக் குழந்தை நாச்சிமுத்துவுடன் கலந்து கொண்டு திருப்பூரில் கைது செய்யப்பட்டு நிதிமன்றத்தில் மூன்று மாத சிறை தண்டனை வழங்க தன் குழந்தையுடன் வேலூர் சிறையில் பலத் துன்பங்களுக்கு ஆளானார்.

அதன் பின் காங்கிரஸ் செயல்குழுக் கூட்டம் வார்தாவில் 14.07.1942 அன்று நடைபெற்றது. அதில் சுயராஜ்ஜியம் வேண்டியும், ஒத்துழையாமை இயக்கப் போராட்டம் நடத்த அறிவிக்கப்பட்டது. அகில இந்திய காங்கிரஸ் பேரியக்கம் பம்பாய் 08.08.1042 அன்று ஒன்று கூடினார்கள். வெள்ளையனே வெளியேறு செய் அல்லது செத்துமடி என்று தீர்மானத்தை அறிவித்தார் காந்தி. நாடெங்கும் மக்கள் ஒன்று திரட்டனர். ஆகஸ்ட் புரட்சியாக உருவெடுத்தது.

*காந்தியும் தலைவர்கள் இருபத்தொருவரும் மறுநாள் காலை கைது செய்யப்பட்டார்கள். திருப்பூரில் நடைபெற்ற புரட்சியில் சுந்தராம்பாள் கலந்து கொள்ள கைது செய்யப்பட்டு மீண்டும் ஏழு மாத சிறை தண்டனையை அனுபவித்தார்.*

*அம்மா அவர்கள் பொது வாழ்வில் தன்னை அர்பணித்துக் கொண்டார் பல்லடம் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டித் தலைவராகப் பொறுப்பேற்று காவல் துறையினரிடம் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கோர தடை கோரி மறுத்த நிலையில் தடையினை மீறி பொதுக்கூட்டம் நடத்தியதால் மீண்டும் மூன்று மாத சிறை தண்டனையைப் பெற்றார். திரு.சி.நாராயணசாமி நாயுடு அவர்கள் விவசாயிகளுக்கு விதிக்கப்பட்ட மின்கட்டண உயர்வை எதிர்த்து போராடிய போராட்டத்தில் கலந்து கொண்டு 70 நாள் சிறைவாசம் இருந்தார்*

*பொதுவாழ்வு*

*கதரியக்கத்தில் தன்னை முழுவதும் அர்பணித்து வீரபாண்டியிலுள்ள தன் குடும்பத்துக்குச் சொந்தமான 22.82 ஏக்கர் புமியை வீரபாண்டி காதி கிரோமோத்யோக் வித்யாலயத்திற்கு வழங்கினார் ராஜாஜி அவர்கள் அந்த கட்டிடத்தைத் திறந்து வைத்தார். அக்காலக் கட்டத்தில் புமி தான இயக்கத் தலைவர் வினோபபவே வருகை புரிந்து காந்தீயக் கொள்கைகளை மக்கள் மனதில் ஊன்றினர். அந்த கருத்துக்களால் கவரப்பட்ட அம்மா அவர்கள் ஆதரவற்ற குழந்தைகளுக்காக காந்தி சுந்தராம்பாள் சேவாமந்தீர் தன் 2.59 ஏக்கர் நிலத்தில் தொடங்கி இறுதி காலத்தில் அமைதியாக குழந்தையோடு குழந்தையாக வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார்.*

*விவசாயக் குடும்பத்தில் பிறந்து குடும்பத் தலைவர்கள் விடுதலை வேள்வியில் களம் இறங்காதபோது ஒரு பெண் துணிச்சலுடன் வேள்வியில் குதித்து பலமுறை சிறைச்சாலையில் தன் குழந்தையோடு துயரப்பட்டு பின் பொதுச் சேவையில் ஈடுபட்ட இந்த பெண்ணின் வரலாறு போற்றுதலுக்குரியது.*

*அன்று இரண்டு சுந்தராம்பாக்களின் வாழ்க்கைச் சம்பவம் இன்று அது வரலாறு. புராண, இதிகாசத்தில் இடம் பெறாவிட்டாலும் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இருவரின் பங்கு சாதாரணமானதல்ல. தினமும் நாம் கடந்து செல்லும் பாதைகள் தான் அன்று சுதந்திரத்துக்காக உக்கிரமான போராட்டம் நடந்த இடம் என்பதை உணர்ந்து வாழ்க்கை பயணத்தைத் தொடர்வோம்.*

*பார்வை நூல்கள்*


1. *விடுதலை வேள்வியில் தமிழகம் – த.ஸ்டாலின் குணசேகரன் – நிவேதிதா பதிப்பகம்,*
2. *கொங்கு மகளிர் – புலவர் செ.இராசு –*
3. *கொங்கு இரத்தினங்கள் – எஸ்.கே.கார்வேந்தன் – சுதம் பதிப்பகம், கோவை*
4. *கொங்கு மாமணிகள் – முனைவர் S.K.கார்வேந்தன் – எஸ்.கே.கே.கல்வி அறக்கட்டளை, தாராபுரம்*


********* ********* ********** ********* ********* ********** ********** **********